# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை - 2024 சனவரி

## (204) வணிக முகாமைத்துவம்

---

### பகுதி A

**வினா இல. 01**

இந்த வினா 15 உப பிரிவுகளைக் கொண்டுள்ளது. வினா இல. 01 இற்கான மொத்தப் புள்ளிகள் 25 ஆகும்.

வினா இல. **1.1** தொடக்கம் **1.5** வரையானவற்றுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து, தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுமாறு கூறப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான சரியான விடையைத் தெரிவு செய்திருந்ததுடன், மிகச் சிலர் தொடர்புடைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றியிருக்காமையும் அவதானிக்கப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட விடைகளின் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிட வேண்டும் என்ற போதிலும் சில பரீட்சார்த்திகள் விடைகளை வினாத்தாளிலேயே அடையாளப்படுத்தி, அவ்வினாத்தாளை விடைத்தாளுடன் இணைத்திருந்தனர். வேறு சில வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் நேர முகாமையை பயனுதியுடன் முகாமை செய்யாது, விடைத்தாளில் விடைக்குரிய இலக்கங்களை எழுதுவதற்குப் பதிலாக விடைகளை எழுதியிருந்தனர்.

இல. **1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் தரப்பட்ட இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட இரு விடைகளிலிருந்து தெரிவு செய்து அதனை விடைத்தாளில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமான விடைகளை அளித்திருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் போதிய அறிவைக் கொண்டிருக்காததாலும், பரீட்சைக்கான முன்னாயத்தத்தில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாகவும் போதிய புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை.

பரீட்சார்த்திகள் விடைகளை எழுதும்போது தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் விளங்கிக்கொள்கின்ற அதே வேளை பாடத்திட்டத்திலுள்ள பல பகுதிகள் உள்ளடக்கப்படுகின்ற இத்தகைய வினாக்களுக்கு விடையளிக்கும்போது முகாமைத்துவம் பற்றிய நல்ல புரிதலையும் கொண்டிருத்தல் வேண்டும்.

இல. **1.11** தொடக்கம் **1.15** வரையிலான வினாக்களுக்கான குறுகிய விடைகளை விடைத்தாளில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுமாறு கேட்கப்பட்டது.

**1.11** இவ்வினா சிறந்த தந்திரோபாயம் ஒன்றின் இரண்டு பண்புகளை அடையாளங் காணுமாறு கேட்டிருந்தது. சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் மாற்று விடைகளையும் சமர்ப்பித்திருந்தனர்.

**1.12** இங்கு, மனித வள முகாமைத்துவத்தின் இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாற்று விடைகளும் அடையாளங் காணப்பட்டிருந்தன.

**1.13** இங்கு நிறுவனமொன்றின் வழங்கல் சங்கிலியை முகாமிப்பதற்கான இரண்டு தந்திரோபாயங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் பற்றிய சரியான புரிதலை பெரும்பாலான பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பதை காணக்கூடியதாக இருந்தது. இதனால் மிகக் குறைந்த புள்ளிகளையே பரீட்சார்த்திகள் பெற்றிருந்தனர்.

**1.14** இங்கு, தந்திரோபாயத் திட்டமிடல் செயன்முறையிலுள்ள GAP பகுப்பாய்வு என்பதாற் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இங்கு வழங்கப்பட்ட விடைகள் மிகவும் மோசமான மட்டத்தில் இருந்ததை அவதானிக்க முடிந்தது. அதே வேளை சில பரீட்சார்த்திகள் விடை எழுதுவதைத் தவிர்த்திருந்தனர். தொடர்புடைய புள்ளிகளை இலகுவாகப் பெறக்கூடியதாக இருந்த போதிலும், வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாததாலும் விடயம் தொடர்பான அறிவு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதாலும் பெரும்பாலான பரீட்சார்த்திகளால் புள்ளிகளைப் பெற இயலவில்லை.

**1.15** இங்கு, மாற்றத்திற்கான தடைகளைச் சமாளிப்பதற்கான இரண்டு நடவடிக்கைகளைப் பரிந்துரைக்குமாறு கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகளில் ஏறக்குறைய அரைவாசிப் பேர் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்து, புள்ளிகளைப் பெற்றிருந்த அதே வேளை சிலர் சம்பந்தமற்ற மாற்று விடைகளாக ஏற்றுக்கொள்ள முடியாத விடைகளை அளித்திருந்தனர்.

## <u>பகுதி B</u>

இந்தப் பகுதி ஐந்து கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இவ்வொவ்வொரு வினாவுக்கும் பத்து புள்ளிகள் வீதம் மொத்தம் 50 புள்ளிகள் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

### வினா இல. 02

இவ்வினா வணிக வெற்றிக்கு பயனுறுதிமிக்க தீர்மானமெடுத்தலின் முக்கியத்துவம் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதை நோக்காகக் கொண்டிருந்தது. இது மூன்று உப பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** இவ்வினா நிறுவனமொன்றின் ஒரு முகாமையாளரால் ஆற்றப்படும் இரண்டு பிரதான முகாமைத்துவ வகிபாகங்களைத் தெளிவுபடுத்த எதிர்பார்த்தது. இங்கு என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை பெரும்பாலான பரீட்சார்த்திகள் புரிந்து கொள்ளவில்லை என்பது உறுதியாகத் தெரிந்தது. இதற்காக திட்டமிடலின் முகாமைத்துவத் தொழிற்பாடுகள், நிறுவனத்தை வழிநடத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. முகாமைத்துவ வகிபாகங்களை இனங்காணுதல் தொடர்ந்தும் பலவீனமாகவே உள்ளது.

**(b)** தீர்மானமெடுத்தலின் இரண்டு முக்கியத்துவங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் இலகுவாக புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(c)** தனிப்பட்ட தீர்மானமெடுத்தல் வேலைச்சட்டகத்திற்கு இணங்க, இரண்டு தீர்மான மாதிரிகளை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு விடையளிப்பதைத் தவிர்த்திருந்த சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

**வினா இல. 03**

இவ்வினா திட்டமிடல் பற்றிய புரிதலைப் பரீட்சித்திருந்தது. இது மூன்று உப பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** இவ்வினா திட்டமிடலின் மூன்று கோட்பாடுகளை இனங்காண்பதை நோக்காகக் கொண்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவில் என்ன கேட்கப்பட்டது என்பதை சரியாக விளங்கியிருக்கவில்லை. திட்டமிடலின் மூன்று கோட்பாடுகளை மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே சரியாக ஏற்பிசைவு செய்திருந்தனர். அதிகளவானவர்கள் ஒழுங்கமைப்புக் கோட்பாடுகளை அல்லது ஒழுங்கமைப்பின் பண்புகளை விடையாக எழுதியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

**(b)** இவ்வினா திட்டமிடல் செயன்முறையை முன்வைப்பதைப் பரீட்சித்திருந்தது. இது முகாமைத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடு என்பதால் இது மிகவும் இலகுவான வினாவாக இருந்தது. இருப்பினும் திட்டமிடல் படிமுறைகளைச் சரியாகக் குறிப்பிடாத சந்தர்ப்பங்களையும் அவதானிக்க முடிந்தது. சில பரீட்சார்த்திகள் மிகவும் வெற்றிகரமான முறையில் விடையளித்திருப்பதும் சுட்டிக்காட்டப்படத்தக்கதாகும்.

**(c)** இங்கு, திட்டமிடலின் இரண்டு பண்புகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமான விடைகளை அளித்து, புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் விடைகளை விபரிக்காது மூன்று பண்புகளைக் குறிப்பிட்டிருந்த சந்தர்ப்பங்களையும் காணக்கூடியதாக இருந்தது.

**வினா இல. 04**

இவ்வினா தலைமைத்துவக் கோட்பாடுகள் மற்றும் ஊக்கப்படுத்தல் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க முன்வைக்கப்பட்டிருந்தது. இது இரு பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** இவ்வினா Fielder சூழ்நிலைசார் தலைமைத்துவக் கோட்பாட்டினால் இனங்காணப்பட்ட இரண்டு வகையான தலைவர்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடையை அளித்து, புள்ளிகளைப் பெற்றிருந்த அதே வேளை பெரும்பாலானவர்களால் சரியான விடையை அளிக்க முடியவில்லை. இரு வேறு வகையான தலைவர்கள் தொடர்பில் வினாவுக்குச் சம்பந்தமற்ற விடைகள் அளிக்கப்பட்டிருந்தன. வினாவைப் பற்றிய புரிதல் இன்மையால் அல்லது பரீட்சைக்கு முன்னரான தயார்படுத்தல் இன்மையால் பல பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்டிருந்த விடைகள் புள்ளிகளைப் பெறக்கூடிய வகையில் அமைந்திருக்க வில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. அத்துடன், எவ்வித திடமும் இல்லாமல் விடைகள் முன்வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இந்தப் பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகையும் மோசமான நிலையில் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

**(b)** இந்தப் பகுதியில், ஒரு தலைவராக ஊழியர்களை ஊக்கப்படுத்தும் மூன்று வழிமுறைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இவ்வினாவுக்கு ஆறு புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமான விடைகளை அளித்து, புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கியிராததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. வேறு சில பரீட்சார்த்திகள் விடைகளாக நிதிசார் மற்றும் நிதிசாரா ஊக்கப்படுத்தல் முறைகளை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், மாணவர்களின் செயலாற்றுகை இப்பகுதிக்கு உயர் மட்டத்தில் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

**வினா இல. 05**

முகாமைத்துவத்தின் பயனுறுதிமிக்க தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றிய புரிதலைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா முன்வைக்கப்பட்டிருந்தது. இவ்வினா மூன்று பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** இங்கு, பயனுறுதிமிக்க தொடர்பாடலின் இரண்டு பண்புகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலானவர்கள் விடைகளை வழங்கியிருந்தனர். பயனுறுதிமிக்க தொடர்பாடலின் பண்புகள் பற்றி பரீட்சார்த்திகள் சரியான புரிதலைக் கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. சில பரீட்சார்த்திகள் விடைகளாக தொடர்பாடல் செயன்முறையிலுள்ள தேவைப்பாடுகளை எழுதியிருந்ததை அவதானிக்க முடிந்தது. ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.

**(b)** தொடர்பாடல் திறன்கள் பற்றிய சரியான புரிதலின்றி ஒரு முகாமையாளரிடம் இருக்க வேண்டிய திறன்கள் பற்றிய விடைகள் அளிக்கப்பட்டிருந்தன. வேறு சிலர், முகாமையாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய தொடர்பாடல் திறன்கள் பற்றி சரியானவாறு விடைகளைச் சமர்ப்பித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(c)** இங்கு, இரண்டு கட்டுப்படுத்தல் நுட்பங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இந்தப் பகுதிக்கான பிரதிபலிப்பு வீதம் மேலே பகுதி 5(b) உடன் ஒப்பிடுகையில் குறைவானதாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரண்டு கட்டுப்பாட்டு நுட்பங்களைக் குறிப்பிட்டிருந்தனர் எனினும், அவற்றை விபரித்திருக்கவில்லை. விடைகள் வினாவில் கேட்கப்பட்டதற்கு ஏற்ப வழங்கப்பட வேண்டும் என்பதால் அத்தகைய பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை.

### வினா இல. 06

இவ்வினா நிறுவனமொன்றின் சந்தைப்படுத்தல் பற்றிய புரிதலைப் பரீட்சிப்பதற்காக முன்வைக்கப்பட்டிருந்தது. இவ்வினா மூன்று பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** இவ்வினா நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் கலவையொன்றின் இரண்டு முக்கியத்துவங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகமான மாணவர்கள் முக்கியத்துவங்களைக் குறிப்பிட்டிருந்தனராயினும் அவற்றை விபரிக்கவில்லை. சில மாணவர்கள் சந்தைப்படுத்தல் என்றால் என்ன என்பதையும் அதற்கான விபரிப்புகளையும் வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் சந்தைப்படுத்தல் கலவையிலுள்ள பொருள், விலை, இடம், ஊக்குவிப்பு தொடர்பில் பொருள் அல்லது விலையைப் பற்றி மாத்திரம் எழுதியிருந்த சந்தர்ப்பங்களும் உள்ளன. ஒட்டுமொத்தத்தில், இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை மோசமான மட்டத்தில் இருந்தது.

**(b)** நிறுவனம் ஒன்றிற்கான பண்டக் குறியிடலின் இரண்டு முக்கியத்துவங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் உரிய புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஒட்டுமொத்தத்தில், இப்பகுதிக்கான செயலாற்றுகை உயர்வாக இருந்தது.

**(c)** வணிகமொன்றின் தொழிற்பாட்டில் புதிய தொழினுட்பங்களின் இரண்டு தாக்கங்களை அடையாளங் காணுமாறு கேட்கப்பட்டது. இங்கு, வினாவானது சரியாக விளங்கிக் கொள்ளப்படவில்லை. பல பரீட்சார்த்திகள் CAP, CAM, SIM போன்ற புதிய தொழினுட்பங்கள் பற்றிய விபரங்களைச் சமர்ப்பித்திருந்தனர் ஆயினும், அத்தகைய தொழினுட்பங்கள் வணிகத்தின் தொழிற்பாட்டில் எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதைக் குறிப்பிடவில்லை. இதற்கான செயலாற்றுகை மிதமானதொரு மட்டத்தில் காணப்பட்டது.

# <u>பகுதி C</u>

**வினா இல. 07**

இது ஒரு விடய ஆய்வு வினாவாகும். கோட்பாட்டு ரீதியான விடயங்களைத் தரப்பட்ட விவரணத்துடன் பரீட்சார்த்திகள் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்கள் என்பதைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா அமைக்கப்பட்டிருந்தது. இது **(a), (b), (c), (d), (e)** என 5 பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி**யின் சந்தைப்படுத்தல் அணியால் அடையாளங் காணப்பட்ட குறித்த தந்திரோபாயங்கள் கம்பனி அதன் இலக்குப் பார்வையாளர்களை அடைவதற்கு எவ்வாறு உதவும் என்பதை விபரிக்குமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டது. எனவே, பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிப்பதற்கு அவ்விடயம் பற்றிக் கவனமாக வாசித்து, விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். வினாவில் கேட்கப்பட்ட விடயத்தை தரப்பட்ட விவரணம் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

சந்தைப்படுத்தல் அணியால் பின்பற்றப்பட்ட தந்திரோபாயங்களை கவனமாக அவதானித்தால் விடையளிக்க முடியும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் தந்திரோபா யங்களை அடையாளங் கண்டு, விடைகளை வழங்கியிருந்த போதிலும், சிலர் விவரணத்தைச் சரியாக வாசிக்காததால் சரியாக விடையளிக்கத் தவறியிருந்தனர். அத்துடன், அத்தகைய தந்திரோபாயங்கள் இலக்குப் பார்வையாளர்களை எவ்வாறு அடையும் என்பதை விபரிக்கத் தவறியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

**(b)** இவ்வினா **வரையறுக்கப்பட்ட XYZ** கம்பனி அதன் ஊழியர்களை தக்கவைத்துக் கொள்வதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய மூன்று பரிந்துரைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது.

இலகுவாக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வினாவாக இது இருந்த போதிலும், வினாவுக்குச் சம்பந்தமற்ற விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இங்கு, ஊழியர்களுக்கான சாதகமான சூழ்நிலைகளையும் அவர்களை ஊக்குவிக்கும் சம்பவங்களையும் குறிப்பிட்டு விடைகள் எழுதப்பட வேண்டும். சில மாணவர்கள், புதிய ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்களை எழுதியிருந்த போதிலும் அவர்களால் அதற்கான புள்ளிகளைப் பெற இயலவில்லை. ஏற்றுக்கொள்ளத்தக்க விடயங்களை முன்வைத்து, விபரிப்பதன் மூலம் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியம்கூட காணப்பட்டது. இதற்கான செயலாற்றுகை மிதமானதாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

**(c)** **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** தமது செயற்பாடுகளில் கூட்டிணைத்துள்ள மூன்று குறிப்பான தன்னியக்கத் தொழினுட்பங்களை அடையாளங் காணுமாறு கேட்கப்பட்டது. வெற்றிகரமாக விடைகள் அளிக்கப்படாத பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. விடய ஆய்வைத் தெளிவாக வாசித்து விளங்கியிருந்தால் இதற்கான விடைகளை அளிப்பது இலகுவானதாக இருந்திருக்கும்.

**(d)** **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** அவர்களது போட்டி அனுகூலத்தைப் பேணுவதற்கு மாறும் சந்தை நிலைமைகள் மற்றும் தொழினுட்பப் போக்குகளுக்கு ஏற்ப எவ்வாறு தம்மை மாற்றியமைக்கலாம் என்பதற்கான மூன்று வழிமுறைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அத்துடன், தொழினுட்பப் போக்குகளுக்கு ஏற்ப எவ்வாறு மாறலாம் என்பதை அடையாளங் காண வேண்டிய அவசியம் இருக்கும்போது, இது தொடர்பில் கவனம் செலுத்தாமல் மாறிவரும் சந்தை நிலைமைகள் மாத்திரம் ஆராயப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. ஜாவா தொழினுட்பப் போக்குகளுக்கு ஏற்ப எவ்வாறு மாற்றியமைப்பது என்பது பற்றித் தெளிவாக விபரிக்கப்படவில்லை. இது தவிர, பொருத்தமற்ற உள்ளடக்கங்களும் விடையில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக பரீட்சார்த்திகள் வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர்.

**(e)** பெரும்பாலானவர்கள் மொத்த தர முகாமைத்துவம் (TQM) ஊடாக அடைந்து கொள்ளக்கூடிய அனுகூலங்கள் பற்றி எழுதியிருந்தனர். ஆனால் அவர்கள் தர முகாமைத்துவத்திலிருந்து நிறுவனம் பெறக்கூடிய நன்மைகள் பற்றிக் குறிப்பிட வேண்டும். இந்த வினாவில் சாத்தியமான ஐந்து அனுகூலங்கள் மாத்திரமே எதிர்பார்க்கப்பட்டது. விபரிப்புகள் அல்ல. ஆனால் சில மாணவர்கள் விபரித்து எழுதியிருந்தனர். இங்கு அனுகூலங்களை எழுதுவது மாத்திரமே அவசியமானதாகும்.

- - - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தையும் ஆற்றல் மட்டத்தையும் மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான காரணிகள் :**

(1) பாடத்திட்டத்தை/ பாடப்புத்தகத்தை நன்கு படிக்கவும்.

(2) வினாத்தாளைப் பெற்றவுடன் அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும் (இந்நோக்கத்திற்காக கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது).

(3) பரீட்சார்த்திகள் வினாவை பல தடவைகள் வாசித்து, எதனை விபரிக்க வேண்டும் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். நேரடி விடையொன்று எதிர்பார்க்கப்படும் போது விடைகள் துல்லியமாக வழங்கப்பட வேண்டும். தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.

(4) விடைகள் ஒரு மொழியில் மாத்திரம் எழுதப்பட வேண்டும். இந்த மொழிமூலமானது நீங்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பித்த மொழிமூலமாகவே இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகளை எழுத ஆரம்பிக்கும்போது விடைப் புத்தகத்தின் ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.

(5) பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

(6) விடைப் புத்தகத்தை கையளிப்பதற்கு முன்னர், எல்லா வினா இலக்கங்களையும் இரு முறை பரீட்சிப்பதுடன் சுட்டெண் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதையும் பரீட்சிக்கவும்.

(7) “செயல் வினைச்சொல் செவ்வை நிரல்’’ வினாத்தாளின் இறுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் வினைச்சொல் ஒன்றைக் கொண்டிருக்கும். பரீட்சார்த்திகள் அந்தச் செவ்வை நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளித்தல் வேண்டும்.

(8) கையெழுத்து தெளிவானதாக இருப்பதையும் வினா இலக்கங்கள் ஒவ்வொரு விடைக்கும் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்துங்கள்.

(9) AAT இனால் வெளியிடப்பட்ட சுய கற்றல் பாடப் புத்தகத்தையும் கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றையும் வாசிப்பது முக்கியமானதாகும்.

(10) கடந்தகால வினாத்தாள்களுக்கும் முன்னோடி வினாத்தாள்களுக்கும் விடையளித்து பயிற்சி பெறுவது அறிவை மேம்படுத்த உதவும்.

(11) சித்தியடைகின்ற உறுதியான நேர்மறையான மனநிலையுடன் பரீட்சையை எதிர்கொள்ளுங்கள்.

- * * *-